செ.வெ.எண். 11/ஜூன் தேதி : 04.06.2016

# பத்திரிக்கை செய்தி

## தென்மேற்கு பருவ நிலை காரணமாக மழை பெய்வதையொட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கைக் குறித்து மாவட்ட ஆட்சியரங்கில் தொற்றுநோய்கள் பரவமால் தடுப்பது குறித்து ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.





தருமபுரி மாவட்டத்தில் அனைத்து வட்டார பகுதிகளிலும் மழை பெய்துள்ளது. மழையின் காரணமாக நீர்த்தேக்கம் ஏற்பட்டு கொசுக்கள் உற்பத்தி அதிகமாகி டெங்கு, மலேரியா, சிக்குன் குனியா ஆகிய நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. மழைநீரின் காரணமாக தண்ணீரில் பரவும் நோய்களான காலரா போன்ற நோய்கள் ஏற்படும். ஆதலால் குடிநீரில் குளோரினேசன் அவ்வப்போது செய்யவும் உள்ளாட்சி பகுதிகளில் தண்ணீர் செல்லும் குழாய்களில் உடைப்பு இல்லாமலும் நீர் கசிவு இல்லாமலும் இருக்கவும் பழுதடைந்த குழாய்களை உடனுக்குடன் பழுதுபார்க்கவும் உள்ளாட்சி பணியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நீர் தேங்கும் இடங்களான தொட்டிகள், டேங்குகள், தேங்கா ஓடுகள், பானைகள், பிளாஸ்டிக் பக்கெட்டுகள், டீ கப்புகள் அவ்வப்போது சுத்தம் செய்யவும் தேவையற்ற, உபயோகமற்ற உடைந்த பானைகள் பிளாஸ்டிக் பொருட்கள், டயர்கள் மற்றும் நீர்த்தேக்கம் உள்ள குப்பை கூலங்களில் அவ்வப்போது சுத்தம் செய்ய உள்ளாட்சி அமைப்பு பணியாளர்கள் உடனடியாக கையாண்டு தொற்று நோய்கள் ஏற்படுவதை தவிர்க்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். காய்ச்சல் கண்டவர்களுக்கு நிலவேம்பு குடிநீர் அனைத்து மருத்துவ ஆரம்ப சுகாதார நிலையங்களில் கொடுக்க சுகாதார துறை மேற்கொள்ள வேண்டுமாறு மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு. ஜெகதீஷ்குமார், உதவி இயக்குநர் (கிராம பஞ்சாயத்து) திரு. பழனிசாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (ஊராட்சி) திருமதி. சுசீலா, வட்டார மருத்துவ அலுவலர்கள் , சுகாதார மேற்பார்வையாளர்கள், சுகாதார ஆய்வாளர்கள், மகளீர் சுய உதவி குழு உறுப்பினர்கள், நகராட்சி பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.